5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 20-வது அறிக்கையினை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 22 மற்றும் 23 ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ் 2008-2009 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2008 மே 6]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன்கீழ், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS